பக்கங்கள் ஆறு

Registered as a Newspape

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (26-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 241

# அரசுக்கு எதிரான இயக்கம் தெற்கில் மேலும் வலுக்கிறது

## கறுப்பு மாதம் அனுஷ்டித்து மக்களை அணிதிரட்ட ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 26

தென்னிலங்கையில், அரசாங்கத்துக்கு எதிரான இயக்கம் மேலும் வலுத்து வருகிறது. அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் முயற்சியை எதிரணிக் கட்சிகள் படிப்படியாகத் தீவிரப்படுத்தி வருகின்றன.

ஓசை எழுப்பும் போராட்டம், நடைபவனிப் போராட்டம், மக்கள் கைகோர்த்து சங்கிலிப் போராட்டம் என்பவற்றை அடுத்து "கறுப்பு வாரம்" "கறுப்பு மாதம்" போராட்டங்களை ஆரம்பிப்பதற்கு எதிரணிக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலின் ஞாபகார்த்தமாக ஆகஸ்ட் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் கறுப்பு வாரம் அனுஷ்டிக்க உள்ளன.

அதனைத் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு கறுப்பு மாதம் அனுஷ்டிக்க முடிவாகியுள்ளது.

கறுப்பு மாத முடிவில் கறுப்பு உடை அல்லது கறுப்புப்பட்டி அணிந்த சுமார் 10 லட்சம் மக்களை கொழும்பில் ஒன்று திரளச் செய்து எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'கறுப்பு எதிர்ப்பு' இயக்கத்தின்போது சகல கவரொட்டிகள், ஊர்வலங்களில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அலிஞ்சிப்பொத்தானையில் காவலரண் மீது தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

பொலன்னறுவை மாவட்டம் அலிஞ்சிப்பொத்தானையில் அமைந்திருந்த பொலீஸ் — இராணுவ காவலரண் மீது கடந்த புதன் இரவு 7.15 மணியளவில் திடீர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தினர் என்றும்—

தாக்குதலை முறியடிக்க வேறு இடங்களிலிருந்து மேலதிக படையினரை அழைக்க வேண்டியநிலை ஏற்பட்டது என்றும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-5]

## வளலாய் முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

வளலாய் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி தொடக்கம் சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன; துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை வளலாய், தொண்டமானாறு கடற்பிராந்தியத்தில் இருந்தும் கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களினால் பீதியடைந்த பத்தமேனி, அச்சுவேலி, தோப்பு பகுதி மக்கள் அயல் கிராமங்களுக்கு இரவோடு இரவாக இடம் பெயர்ந்தனர்.

எனினும் நிலைமை சீரடைந்ததை அடுத்து நேற்றுக் காலை அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

## திருமலையில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூலை 26

திருமலையில் படையினரின் பதுங்குகுழி ஒன்றில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்; இருவர் காயமடைந்தனர். இராணுவ வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

குண்டுவெடிப்பு தற்செயலாக இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-10]

## வடக்கிலும் சிப்பாய் பலி!

சென்னை, ஜூலை 26

நேற்று வடபகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவத் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் இருவர் காயமடைந்தனர். கொழும்பில் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி இந்திய வானொலி இவ்வாறு அறிவித்தது. [உ-10]

## மட்டக்களப்பில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 26

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்று நேற்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக ஸ்ரீலங்கா படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.- (உ-10)

## வெலிக்கடை படுகொலைகள்:

## இன்னுயிர் ஈந்த வீரர்களின் நினைவாக நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வெலிக்கடையில் படுகொலையுண்ட வீரர்களின் நினைவாக நாளை மாலை 7 மணிக்கு ஆவரங்கால் நடராசா இராமலிங்க மகாவித்தியாலய அரங்கில் மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி தமிழீழ மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலக அரசியல் துறை விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மனித நாகரீகத்துக்கு அப்பாற்பட்டு—உலகில் எங்குமே நடைபெற்றிராத வகையில்— வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளாக இருந்த 53 தமிழ்ப் போராளிகளையும், பொதுமக்களையும் சிங்களப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் கோலாகலமாக ஆரம்பம்

பார்சிலோனா, ஜூலை 26

உலகின் மிகப்பெரும் விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக்ஸ் ஸ்பானிய நகரான பார்சிலோனாவில் நேற்று ஆரம்பமானது.

ஒரு வில்வீரரின் வில்லிலிருந்து ஏவப்பட்ட தீப்பந்த அம்பு, உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒலிம்பிக் தீப்பந்தத்தை தொட்டு அதனை எரியச் செய்ததுடன் 25 ஆவது ஒலிம்பிக்ஸ் போட்டிகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

ஸ்பானிய மன்னர் ஜுவான் கார்லோஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை ஆரம்பித்து வைத்ததை அடுத்து — நேற்று முதலாம் நாள் சிறப்பு நிகழ்ச்சிகளான — கண்ணைக் கவரும் கலை நிகழ்ச்சிகள் — நடந்தேறின.

அணி அணியாக — குழு குழுவாக — வண்ண வண்ண ஆடைகளை அணிந்து வந்த இளைஞர்களும், யுவதிகளும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை

### பி. பி. ஸி செய்தியாளர் கணிப்பு

லண்டன், ஜூலை 26

கிழக்கு மாகாணம் தம் கையில் இருப்பதாக ஸ்ரீலங்கா அரச படைகள் கூறினாலும், அங்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மோதல் நடப்பதை அவர்களால் தடுக்க முடியவில்லை;

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இவ்வாறான மோதல்களில் 28 பேர் கொலையுண்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள்.

—பி. பி. ஸி தனது கொழும்புச் செய்தியாளரை மேற்கோள்காட்டி வெளியிட்ட செய்தி ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இனப்பகை நீண்டு கொண்டே போகிறது.

அனைத்துத் தரப்பினரையும் தாங்கள் சமாதானப்படுத்தி வைத்திருப்பதாக பாதுகாப்புப் படையினர் சொல்கிறார்கள்.

மக்களைச் சாந்தப்படுத்த

[6ஆம் பக்கம் பார்க்க]

## சங்கர் தயாள் சர்மா நேற்று பதவியேற்றார்

### இன்று சென்னை வருவார்

புதுடில்லி, ஜூலை 26

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக சங்கர் தயாள் சர்மா நேற்றுப் பதவியேற்றார்.

புதுடில்லி நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தின் போது இந்தியாவின் பிரதம நீதியரசர் எம். எச். கன்யா அவருக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியேற்ற பின்னர் இன்று திருப்பதி செல்லும் புதிய ஜனாதிபதி, வழியில் சென்னைக்கும் விஜயம் செய்வார். என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

பதவி விலகிய முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தனது பொறுப்புக்களை புதிய ஜனாதிபதியிடம் கையளித்த பின்னர் நேற்று மாலை தனது சொந்த இடமான தமிழ்நாட்டிற்குத் திரும்பினார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் வரவேற்பு அளித்தனர்.

[உ-10]

## ஈராக்கை மீண்டும் அமெரிக்கா தாக்கும்?

### எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம்!

லண்டன், ஜூலை 26

ஈராக் மீது மீண்டும் மற்றொரு தாக்குதலை நடத்த அமெரிக்கா தயாராகி வருவதாக அறிவிக்கப்படுகிறது. எந்நேரமும் யுத்தம் வெடிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

தாக்குதல் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தமது விடுமுறையை ரத்துச் செய்துவிட்டு [illegible]துள்ளார் என்றும் —

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தென் தமிழீழப் பகுதியில் அமைந்துள்ள

## எல்லைப் புற காவல் அரண்களை புலிகள் எந்நேரமும் தாக்கலாம்!

### ராணுவ உயர்பீடம் எச்சரிக்கை

தென்தமிழீழ எல்லைப்புறங்களில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களின் காவல் அரண்களை விடுதலைப் புலிகள் எந்நேரமும் தாக்கலாம். ஆகவே எந்நேரமும் விழிப்புடன் இருங்கள்.

—இவ்வாறு தென்தமிழீழத்தில் உள்ள தனது படைஅணிகளை ஸ்ரீலங்கா இராணுவ உயர்பீடம் எச்சரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

[illegible] புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் [illegible] திருந்த படையினர், உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களிடையே குழப்பமான நிலை தோன்றியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இராணுவ முகாம்களைப் பலப்படுத்த வேண்டும் என்றும், படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அங்குள்ள இராணுவ அதிகாரிகள் இராணுவ உயர்பீடத்தைக் கோரி வருவதாகவும்—

இதனால் வடக்கில் இருந்து இராணுவத்தினரை தென்தமிழீழத்துக்கு நகர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. [உ-5]

**வீணாகும் தண்ணீர்-நம் வாழ்நாளின் கண்ணீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் கணபதி ஐயம்பிள்ளை

மலர்வு; 1912 - 09 - 18 | உதிர்வு; 1992 - 06 - 26

அன்புக் களஞ்சியமே! அறிவின் இலக்கணமே!
அறிவுச் சுடரே! அணையா விளக்கே!

எங்களுக்கெல்லாம் நல் கல்வியைத் தந்து, நாலு பேர் நல்ல மாதிரியாகக் கூறும் நிலையில் வைத்து, நல் ஆசிரியனாக காலமெல்லாம் ஆதரவு நல்கியது போது மென்று விண்ணவன் அழைக்கவே, விண்ணுலகம் விரைந்து சென்றுவிட்டீரே! நீர் அணைந்து இன்றுடன் 31 நாள் ஆனாலும், என்றென்றும் அணையாத சுடர் விளக்காய் எங்கள் மனதில் ஒளி வீசிக்கொண்டிருப்பீர்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீலகுட்டியா வளவு,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

[5197]

# பட்டப்பின் ஆராய்ச்சி புலமைப் பரிசில்

கொழும்பு, ஜூலை 26

கல்வி, உயர்கல்வி அமைச்சு ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பட்டப் பின் ஆராய்ச்சி புலமைப் பரிசில்களை அளிக்கும் பொருட்டு தகுதியான விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (த)

# 6 மீனவர்கள் காயம்

சென்னை, ஜூலை 26

பாக்குநீரிணையில் இலங்கைக் கடற்படையினர் சுட்டதில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் காயமடைந்தனர் என்றும் — அவர்களில் நான்கு மீனவர்கள் இராமநாதபுர மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய இரண்டு மீனவர்களின் கதி என்ன - என்பது தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. (த-எ)

# மோட்டார் சைக்கிள் திருடர்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

மோட்டார் சைக்கிளில் இருவராகச் சென்று வீட்டு வளவில் நிற்கும் ஆடுகளைத் திருடிச் செல்லும் சம்பவங்கள் மானிப்பாய்- பண்டத்தரிப்புப் பகுதிகளில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு தொட்டிலடி பிரதான வீதியில் உள்ள வீடு ஒன்றில் நின்ற ஆட்டையும், குட்டியையும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தூக்கிக் கொண்டு சென்றதாகவும் — அதே தினம் மானிப்பாய் பகுதியில் உள்ள ஒரு வீட்டிலிருந்தும் ஆடும், குட்டியும் மோட்டார் சைக்கிள் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-111)

## தொழில் வளக் கண்காட்சியில்

# தமிழரின் சிறப்பை விளக்கும் தனிப்பகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 26

விரைவில் நடைபெறவிருக்கும் தமிழீழ தொழில் வளக் கண்காட்சியில் தமிழரின் கலை, பண்பாடு, இலக்கியங்களின் பழமையையும், தோற்றப் பொலிவையும், சிறப்பையும் உள்ளடக்கிய தனிப் பகுதி ஒன்று மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டு கழக நடுவப் பணியகம் இது தொடர்பாக கண்காட்சி அமைப்பாளர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக கழகத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. அந்தச் செய்திக் குறிப்பில் கலை, பண்பாட்டுக் கழகம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது காட்சியகத்தில் வைப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# English Teachers Selection Exam
## Aug. 26th 1992

Intensified Course (Govt. Past Papers)
Week day Classes Week end Classes

**T. N. PANCHADCHARAM**
AND
**K. SABANAYAGAM**

27th Monday 10-00am

Director J. T. I.
4, Pillayar Lane,
(Opposite Vallaha lane)
Palaly Rd., Thirunelvely.

[21899]

# ஓராண்டு நினைவஞ்சலி

26 — 07 — 1992

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மண் பணிக்கு: 23 — 02 — 1930 | விண் பணிக்கு: 07 — 08 — 1991

பால பண்டிதரும், சமாதான நீதிவானுமாகிய

## அமரர் ஆறுமுகம் குலசேகரம்
(துணுக்காய்)

ஆயிரம் இடம்புரிச் சங்கினுள் அங்கோர்
வலம்புரியாயுதித்து
அறிவொளி யெமக்கூட்டி அன்புடனெமை
வளர்த்தவனிக்களித்திட்டு,
ஆருயிர்தனையீர்ந்து அறிந்து அரனடியடைந் தமைதி
கொண்ட
அன்புடைய ஐயா வுங்களாசிவேண்டி -
இவ்வோராண்டில்
தங்களாத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திக்கிறோம்.
மறு பிறப்பில் நவமணிகளாய் நாமிணைவோம்.

ஓம் சாந்தி!

மனைவி: சௌபாக்கிய லக்ஷ்மி,
பிள்ளைகள்: திருமதி த. தயாநிதி,
கு. தேவகிதேவி,
கு. பரமேஸ்வரன்,
கு. பங்கயற்செல்வி,
கு. யசோதா.
கு. புருஷோத்தமன்,
கு. பகீரதன்,
மருமகன்: ஆ. தங்கராஜா,
பேர்த்தி: பிரியங்கா.
மைத்துனர்: இ. தம்பிராசா குடும்பம்.

துர்க்கா ஸ்தான்,
பிரதான வீதி, துணுக்காய்.

[21834]

# ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 24 — 05 — 1921 | இறப்பு: 06 — 08 — 1991

## திரு. கந்தப்பு இரத்தினசாமி

[இளைப்பாறிய கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர் - Rtd. D. O. A. S.]

திதி: 26 — 07 — 1992

அன்புத் தெய்வமே! பப்பாவே எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"பரமேஸ்வரிபவனம்"
இத்தம்பாதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[5192]

# Practice Makes One Perfect

ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)
அடுத்த பயிற்சிப் பரீட்சை

## 26 - 07 - 1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந்நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

★ Bond — யாழ்ப்பாணம்
★ Express — இருபாலை
★ Selin— கோப்பாய்
★ Pearl— நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls— சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Paarathy — சித்தன்கேணி
★ Bitsmans — மானிப்பாய்
★ Keen — திருநெல்வேலி
★ Ouslo— கச்சேரியடி
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Lukky — சண்டிலிப்பாய்
★ Y.M.C.A. — பருத்தித்துறை

விவரங்களுக்கு:

Examination Unit,
**BOND**
INSTITUTES,
யாழ்ப்பாணம்.

[5202]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 31 — 08 — 1926 | உதிர்வு: 26 — 06 — 1992

## அமரர் W. N. S. சாமுவேல்

B. A .Lond., Dip in Ed.
(இளைப்பாறிய அதிபர், ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை)

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன்
ஹாட்லிக் கல்லூரியின்
ஆசானாய், அதிபராய் - பணிபுரிந்து
இன்முகம் காட்டி
இனியவை கூறும் - அண்ணலே!
இந்த மண் விட்டேகி
இந்திய மண்ணில்
மடிந்தனையோ!

திரு. திருமதி சிவஞானம்.

32, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(இ-2751)

★ யா / வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்க உப-தலைவரும்,
★ வட்டு. இந்து வாலிபர் சங்க போசகரும்,
★ வட்டு. கிராமசேவா சங்கத்தின் தலைவரும்,
★ வட்டு. கல்வி சமூக அபிவிருத்திக் கழகத் தலைவரும்,
★ வலி-மேற்கு பிரதேச பட்டினசபை உப-அலுவலக இளைப்பாறிய நிர்வாக அதிகாரியுமான

அமரர்

## தா. தங்கராசா அவர்களுக்கு



தோற்றம்: 11 — 03 — 1932 | உதிர்வு: 22 — 07 — 1992

# எமது கண்ணீர் அஞ்சலிகள்

★ யா/ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள்.
★ வட்டு. இந்து வாலிபர், சங்கம்.
★ வட்டு. கிராமசேவா சங்கம்.
★ வட்டு. கல்வி சமூக அபிவிருத்திக் கழகம்.
★ வலி-மேற்கு பிரதேச பட்டின சபை சங்கானை உப - அலுவலகம் நலன்புரிச் சங்கம்.

[இ-2780]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் ஜே.வி.பி. மீண்டும் தலைதூக்குகின்றதாம்!

ஜே. வி. பியின் நடவடிக்கைகள் மீண்டும் தென்னிலங்கையில் தலைதூக்கும் அறிகுறிகள் தென்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே பொலீஸார் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும்—

மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாத வகையில் சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். [த]

# நாய்களுக்குத் தடுப்பூசி: முதற் சுற்று முடிவடைந்தது

யாழ்ப்பாணம், ஜுலை 26

யாழ். மாநகர சபைப்பகுதியில் மூன்றாவது கட்டமாக மேற்கொள்ளப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி போடும் பணியின் முதற் சுற்று கடந்த வெள்ளியுடன் முடிவடைந்தது. இரண்டாம் சுற்று நடவடிக்கைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இராசாவின் தோட்டம், கைலாசபிள்ளையார் கோவிலடி உட்பட பல இடங்களில் வெள்ளியன்று நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

இரண்டாம் சுற்று நடவடிக்கைகளின் போது தடுப்பூசி போடப்படும் இடங்கள், காலம் போன்ற விவரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த-5]

# சுதந்திரக்கட்சி எம். பியின் சந்தேகம்

கொழும்பு, ஜுலை 26

"அரசு யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளதாகக் கூறுகிறது. நீங்கள் வடக்கு மாகாணத்தில் எத்தனை இடங்களில் உண்மையாக நிலைகொண்டுள்ளீர்கள் என்பது எமக்குத் தெரியாது. ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினரும், அப்பாவிப் பொதுமக்களும் யுத்தம் நீடிப்பதால் மரணமடைய நேருகிறது. உங்களது ஆட்சியை நீடிப்பதற்காக மனித உயிர்களுடன் விளையாட வேண்டாம்."

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில ஆரம்பித்து வைத்து உரைஆற்றுகையில் சுதந்திரக்கட்சி நாடாளுமன்றஉறுப்பினர் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்தார். [த-5]

# அமெரிக்கா அகதிகளை அனுமதிக்கும்

வாஷிங்டன், ஜுலை 26

இழக்காசியா, முன்னாள் சோவியத் யூனியன் ஆகியவற்றைச் சேர்ந்த ஒரு லட்சத்து 32 ஆயிரம் அகதிகளை அடுத்த ஆண்டு அமெரிக்காவில் அனுமதிக்க ஜனாதிபதி புஷ் திட்டமிட்டு வருவதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் லோறன்ஸ் ஈகிள் தெரிவித்தார்.

உலகிலுள்ள மொத்த அகதிகளின் எண்ணிக்கை 160 லட்சம் ஆகும் என்றும் அவர் சொன்னார். [த]

# நல்லூர்க் கந்தன் உற்சவம் ஆகஸ்ட் 3இல் ஆரம்பம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மஹோற்சவ விசேட தினங்களாக 12ஆம் திகதி, 10 ஆம் திருவிழாவன்று மஞ்சமும், 21 ஆம் திகதி கார்த்திகை உற்சவம், 22 ஆம் திகதி சனிக்கிழமை 20ம் திருவிழா அன்று காலை சந்தான கோபாலர் உற்சவமும் மாலையில் கைலாச வாகனமும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கஜவல்லி - மஹா வல்லி உற்சவம் காலையிலும், மாலை வேல்விமான உற்சவமும், தண்டாயுதபாணி உற்சவம் 24 ஆம் திகதி காலையும், 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறமும், 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு ரதோற்சவமும் இடம்பெறும்.

27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

மேற்படி வருடாந்த உற்சவத்தை யொட்டி, யாழ். மாநகரசபையால் சமய அறிவப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. [த-111]


## MODERN EDUCATION CENTRE,
நெல்லியடி.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு - 1992 / 93**

★ G. A. Q.
★ First in Com.

விரிவுரைகள் 27 - 07 - 1992 திங்கள் 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ நேர அட்டவணைகளை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

★ எதிர்வரும் செப்டம்பரில் ஆரம்பமாகவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைக்கான-

பொருளியல் - மாதிரி வினா - விடை வகுப்பு

*S.* வரதராஜன் B. A. [Hons]

ஒவ்வொரு திங்கட்கிழமையும் 3-30 — 6-30 மணி வரையும் நடைபெறுகின்றது. (சி-2944)



## A/L 94
Chemistry
திரு. மகாதேவா
ஆரம்பம்:
01 - 08 - 1992

அனுமதிக்கான பரீட்சை
30—07—1992
பிற்பகல் 4-00 மணி.

BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
(சி-2776)



## அரசாங்க அறிவித்தல்
**சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் அரசாங்க அலுவலகமாகவும், மார்பு நோய் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்துவதற்கு உகந்ததும் 2500 சதுர அடிகளுக்கு குறையாத இடவசதியும், தண்ணீர் மலசலகூட வசதி கொண்டதுமான கட்டடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்,
இல: 57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2773]



## ஏழாலை தெற்கு மயிலங்காடு உறத்தாவளை
அருள் மிகு
## ஞானவைரவ சுவாமி கோவில்
## மகா சங்காபிஷேகமும் அலங்காரத் திருவிழாவும்

காலம்: 27 — 07 — 1992 திங்கள்
விஷேட அபிஷேகம் காலை 6 மணி - 12 மணிவரை
பகல் 12-30 அன்னதானம்

மாலை நிகழ்ச்சிகள்

5-30 மணியளவில் — சிறப்புச் சொற்பொழிவுகள்
திரு. இ. ஜெயராஜ்
[அகில இலங்கை - கம்பன் கழக அமைப்பாளர்]
திரு. ஆறு திருமுருகன் (ஆசிரியர்)
★ தவில் நாதஸ்வர கச்சேரிகள்
★ வயலின் சோலோ
★ இன்னிசைக் கச்சேரி

- ஆலய அடியார்கள்.

[4923]



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாவனையில் இருந்து கீழ்வரும் பொருள்கள் எதிர்வரும் 1992-07-29 ஆம் திகதி காலை 10 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திருநெல்வேலி வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர், பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி, அப்பொருள்கள் அனைத்தையும் 1992-07-29 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஏலத்தில் விற்கப்படும் பொருள்களை பார்வையிட விரும்புவோர் 1992-07-28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதியாளரோடு தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

ஏலத்தில் விற்கப்பட இருக்கும் பொருள்கள்.

1. கூட்டல் இயந்திரம் —02
2. கதிரைகள் —
   அலுவலகம் —03
   சாப்பாட்டு —07
   உருக்கு —01
3. கரட் உரஞ்சும் தட்டு —01
4. கேத்தில் —
   அலுமீனியம் சாதாரணம் —05
   மின்சாரம் —03
5. வாளி —05
6. தொற்று நீக்கி —01
7. செற்றி கதிரை —
   இருவர் இருப்பது —01
   ஒருவர் இருப்பது —02
8. பாத்திரங்கள் —
   பேசின் —09
   பட்டர் டிஸ் —02
   செம்பு எ/இ —01
   பீங்கான் —06
   ரம்ளர் —05
   இட்டலி சட்டி —01
   தோசை கரண்டி —01
   இடியப்ப உரல் —01
   தண்ணீர் பாத்திரம் —02
   தேனீர் கோப்பை —09
   தேனீர் பீரிஸ் —01
9. ஆட்டுக் கல் —01
10. மின்சார அடுப்பு —02
11. பழைய புதினப் பத்திரிகைகள்
12. கிளிப் அடிக்கும் இயந்திரம் —04
13. சிகரட் சாம்பல் தட்டு —01
14. துவிச்சக்கர வண்டி —01
15. ஓட்டை போடும் இயந்திரம் —12
16. அலுவலக கோவைத் தட்டு —01
17. தட்டச்சு இயந்திரம் —01
18. அருவாள் —01
19. ஆமைப்பூட்டு —03
20. சதுரங்க போட்டும் காய்களும் —01
21. பற்மின்ரன் றக்கற் —08
22. பற்மின்ரன் செற் —02
23. மேசைப்பந்து றக்கற் —05
24. காற் பந்து —01
25. ரியூப் லயிற் செற் —01
26. மணிக்கூடு (மேசை) —01
    (சுவர்) —02
27. கடம் —01
28. வயலின் பெட்டி —01
29. மண்வெட்டி —01
30. ஆய்வுகூட உபகரணம் —03
31. மேசை மின் விசிறி —02
32. மேசைக் கண்ணாடி —01
33. தண்ணீர் விடும் குழாய் —50 அடி
34. மேசை —02
35. போட்டோ பிரதி இயந்திரம் —02
36. கை கழுவும் பேசின் —01
37. மரப்பெட்டிகள்
38. மரச்சிலாகையால் ஆன பெட்டிகள்
39. மரப் பெட்டி பலகைகள்
40. உத்தியோகத்தர்க்கான பாக்குகள்
41. அடி மட்டம் —03
42. கழிவு ஒயில்

ஏலவிற்பனை நடத்தும் உத்தியோகத்தர்களின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.
யாழ். பல்கலைக் கழகம். [சி-2761]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 10 — 04 — 1953
இறப்பு: 06 — 08 — 1991

**வீரகத்தி செல்வகுலசிங்கம்**
(செல்வம்)

திதி: 26 — 07 — 1992

ஆண்டொன்று ஆனதையா - நீ
ஆண்டவன் பாதம் சென்று
ஆனாலும் ஆறவில்லை எம் மனது - இன்னும்
உம் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை -
வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், பெற்றோர்,
சகோதரர்கள், மச்சான்மார்,
மச்சான்மார், மருமக்கள்,
A.V.S. நாதன் (தம்பி)

கச்சார்வெளி,
பளை.

[21894]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

லோன்றிக்கு உரிய இரண்டு ஸ்திரிக்கை பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். P. சிங்கம், இல. 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (I. C. R. C. அருகாமை) (21891)

தாவடி, மானிப்பாய் றோட்டில் பெரிய வீடு நாலரைப் பரப்புக்காணியில், வாங்க விரும்புவர் நேரில் வரவும். இல. 1, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [21871]

Purebred Dobermann Pincher X Rhodesian Ridgeback நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நல்ல இன புறாக்களும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [21883]

## வினா - விடைகள்

G. C. E A/L, O/L மாணவர்களுக்கு கடந்தகால கணக்கியல் வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B. Com.) றோயல் கல்லூரி, கிடைக்குமிடங்கள்: S. K. சாமி அவ கோ, நெல்லியடி, மண்டேலா ரேடர், மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், கனகா புத்தகசாலை பருத்தித்துறை. [21822]

## தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல.15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

## புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2931]

## வெளிவந்துவிட்டது

91 August விசேடம் 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில். 'A'Level Centre. 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 2924)

92 August விஞ்ஞான பாடத்திற்கான மூன்று மாதிரிப் பரீட்சை வினாக்களும் விடைகளும் 91 August, விசேடம்-92 பரீட்சையின் வினாக்களும் விடைகளும் விற்பனைக்கு உண்டு. 'A'Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2935]

## பழைய புத்தகங்கள்

பாவித்த பழைய புத்தகங்கள், கொப்பிகள் நியாய விலையில் விற்க, வாங்க யாழ். பழைய புத்தகக் கடை, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி, யாழ்ப்பாணம். [5193]

## திருமண சேவை

யாழ். இந்து 30 வயது நிரம்பிய B. Sc. சிவில் எஞ்ஜினியருக்கு நட்சத்திரம்: உத்தராடம், 1 ஆம் பாதம், செவ்வாய் 7 இல், லக்கினபாவம் 12/16. உள்ள படித்த, அழகிய பெண் விரும்பத்தக்கது. ABCDE விவாகப் பொருத்துனர், இல: 20, கண்டி வீதி கண்டிக்குளி. [21888]

## O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆரம்பத்தில் இருந்து 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய B.Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [21905]

## எழுதுனர் பதவி

எழுதுனர் பதவி, சுருக்கெழுத்தாளர் பதவி, தட்டெழுத்தாளர் பதவி ஆகியவற்றுக்கான வர்த்தமானி பார்வைக்கு உண்டு. விண்ணப்பப் படிவம் விற்பனைக்குண்டு. பாரதி பதிப்பகம், (A.B. Printers), 430, காங்கேசன்துறை வீதி, (யாழ். இந்துக் கல்லூரி - சிவ தொண்டன் நிலையம் ஆகியவற்றுக்கு அருகில்) யாழ்ப்பாணம். [சி-2951]

## சோதிடம்

உங்கள், உங்கள் குழந்தைகளின் நிகழ்கால, எதிர்கால பலன்களை அறிய நாடுங்கள். அன்னை ஆதிபராசக்தி ஸ்ரீ தேவி அருள் பெற்ற சோதிடர் அம்பிகைதாஸ், ஸ்ரீகுமாரி சோதிட நிலையம், தும்பளை மேற்கு [ஸ்ரீசாரதா தேவி ஆச்சிரமம்], தபால் பெட்டி சந்தி, பருத்தித்துறை. [21909]

## கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, வோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (21904)

## பதவி துறந்தார்

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி செயலகத்தில் பொருளாதார ஆலோசகராகக் கடமையாற்றிய திரு. சி. குணசிங்கம் தனது பதவியைத் துறந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது பதவிக் காலம் முடிவடைந்துவிட்டதாக மற்றொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (த)

# இறை பதமெய்திய 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## T. J. சவுந்தரநாயகம்

26—07—1967

"நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா நீர் இவர் பசிசாய் இருந்தருளும்."

என்றும் அன்பு மறவாத;
மனைவி, மக்கள்.

பிரதான வீதி,
யாழ்நகர். [21902]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
## பரமகுரு ஸ்கந்தகுமார்

(பழைய மாணவன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

பிறப்பு: 13 - 10 - 1969
அன்னியர் அழிப்பு: 26 - 07 - 1989

எங்கள் அன்புச் செல்வமே! தம்பி! தங்கள் ஆத்மா சாந்திக்கு இறைவனை என்றும் பிரார்த்திக்கும்;

"முத்துமாளிகை"
பருத்தித்துறை.

ஐயா, அம்மா, அக்கா,
உறவினர்கள், நண்பர்கள்
[21838]

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு: 09 — 12 — 1966
அழிப்பு: 26 — 07 — 1989

## செல்வன் க. சிவகுலசிங்கம் (இராசன்)

[இ. போ. ச. நடத்துனர் - பருத்தித்துறை]

படுத்துறங்கும் வேளையிலும் பசுங்கிளியே
உன் நினைவு!
நோய் வந்து போகவில்லை நொடிப்பொழுதில்
மாய்ந்து விட்டாய்
பாரதத்து பாவியவன் பாய்ச்சிய குண்டதனால்
தாய் இங்கு கதறுகிறாள் உடன்
பிறந்தோர் பதறுகிறார்
மைத்துனரும் வெதும்பி நின்றார் - பெரிய
அக்காவின் அத்தானோ உனைத்தேடி வந்துவிட்டார்
சின்னம் சிறுசுகளோ என்றும் மறக்கவில்லை,
நீர் எங்குற்றீர் இராசா;

— குடும்பத்தினர்.

புலோலி. [5188]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
## இராமசாமி சிறீபத்மநாதன்

பாசக் கரங்களில்: 17—06—1966
பாசத்து நெஞ்சங்களில்: 26—07—1989

(பரு. ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், தேசிய தொழிற் பயிற்சி சபை டீசல் இயந்திர பொறியியல் மாணவனும் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை சாலை)

இணையில்லா எம் சுடரே — சிறீ
இருட்டிலே எமையாழ்த்தி
இரு நொடியில் அணைந்தீரே!
பத்து மாதம் சுமந்து பெற்ற பதுமையான
அம்மாவும்
பலநாளும் உனை எண்ணி பாதையதை
தொடர்ந்தாவே!
காரிருளினுள் காததூரம் நீங்கள் சென்றும் - எம்
காதுகளில் உங்கள் குரல்கள்
கணம் கணமாய் ஒலிக்கின்றன.

ஓம் சாந்தி!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

தந்தை, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனி,
மருமக்கள், பெறாமக்கள்.

குரும்பசிட்டி,
புலோலி தெற்கு. [21900]

# ஈராண்டு நினைவஞ்சலி



## அமரர் சி. கந்தசாமி

(சாமி பலபொருள் களஞ்சியம்)

மண்ணில்: 26 - 09 - 1933
விண்ணில்: 18 - 07 - 1990

திதி: 26 — 07 — 1992

பண்பின் உறைவிடமே! பாசத்தின் ஒளி விளக்கே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டாகியும், உங்களை எங்களால் மறக்க முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1/9, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். [21890]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான் ஒரு நாடகப் பைத்தியக்காரன் என்று பெருமைப்பட்ட கலையரசு

நாடகமே என் நினைவு, நாடகமே என் கனவு, நாடகமே என் இன்பம், நாடகமே என் கவலை, நாடகக் கலையே என் தெய்வம் இவ்வாறு வாழ்ந்து வருபவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள். ஈழத்திலே தமிழ் நாடகத்திற்கு மதிப்பும், தாய்மையும் தேடிக் கொடுத்தவர் கலையரசு அவர்களே.

நாடகக்கலை இழிவான தென்றும், அது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய கலைத்துறையென்றும், எனவே அதில் எவரும் ஈடுபடக் கூடாதென்றும், நாடகச் சபையில் அங்கத்துவம் வகிப்பதே ஒருவரின் அந்தஸ்தைப் பாதிக்கும் என்றும் கருதப்பட்ட காலத்திலே 07-07-1913 இல் இலங்கா சுபோத விலாச சபா என்றொரு நாடக மன்றத்தினை நிறுவி, அக்காலச் சமூக அமைப்பிலே முக்கிய அந்தஸ்துப் பெற்றிருந்த ஆங்கில வைத்தியர்களையும், வழக்கறிஞர்களையும், ஆசிரியர்களையும், உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களையும் அம்மன்ற உறுப்பினர்களாகக் கொண்டு நாடகத்துறையில் ஒரு விழிப்பையும், எழுச்சியையும் உண்டாக்கியவர் கலையரசு அவர்களே.

இருபதாம் நூற்றாண்டிலே, ஈழத்தில் நாடகத்திற்குப் பெருமையும், சிறப்பும் தேடிக் கொடுத்ததுடன் கலையரசின் பணி முற்றுப் பெறவில்லை. தொடர்ச்சியாக 67 ஆண்டுகளாக, நாடக உலகிலே தனக்கென ஒரு தனியிடம் பெற்று விளங்கியவர்.

இவர் எண்ணற்ற நாடகங்களில் நடித்தது மட்டுமன்றி 500 இற்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்துமளித்திருக்கிறார், அந் நாடகங்களில் ஒன்றாயினும் இது வரை தோல்வியடையவில்லை. எனவே இவரது நாடகத் தயாரிப்பு அனுபவமும் மகத்தானது.

> ஈழத்து நாடகத்துறையின் முன்னோடியாக விளங்கிய கலையரசு சொர்ணலிங்கத்தின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் இன்று காலை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றன. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. கலையரசு சொர்ணலிங்கம் எழுதி 1968 இல் வெளியிடப்பட்ட நூலுக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் எழுதிய அணிந்துரையின் தொகுப்பு இதுவாகும்.

மேலும், இன்றுவரை ஈழத்தில் பல பாகங்களிலும் நாடகங்களையும், கூத்துக்களையும், இசை நாடகங்களையும், நான் தோறும் கலையரசு பார்த்து வந்திருக்கின்றார். பல நாடகப் போட்டிகளிலே பிரதான நடுவராகவும் கடமையாற்றியிருக்கின்றார். பலவகை நாடகங்களைப் பார்த்தவர், மதிப்பிட்டவர் என்ற வகையிலும் இக் கலைஞருக்கு ஆழமான, பரந்த அனுபவமுண்டு.

### நடிகனுக்குத் தேவையானவை

ஒரு குணச்சித்திர நடிகனுக்கு ஒப்பனையும், நடிப்பும் முக்கியமென்பதனை இவரது வரலாற்றிலிருந்து அறிகிறோம். நடிகனுக்குக் கற்பனையும், சிந்தனையும், முயற்சியும், தன்னம்பிக்கையும் கட்டாயம் வேண்டுமென்பது இவருக்குப் புகழீட்டிய பாத்திரங்களிலிருந்து அறியக்கிடக்கின்றன.

### நானை அகற்ற வேண்டும்

சிறந்த நடிகனாக விளங்க விரும்புவோன் தன்னை மறக்க வேண்டுமென இவர் கூறுகின்றார். நான் என்பதனை மறத்தலே தன்னை மறக்க வேண்டும் என்பதன் பொருள். ஒருவன் மேடையிலே தோன்றி நடிக்கும்போது நான் நடிப்பதாக எண்ணக் கூடாது. என்ன பாத்திரமாக நடிக்கிறானோ, அப்பாத்திரமே தான் என்ற உணர்ச்சியைப் பெற வேண்டும். நான் நடிக்கின்றேன் என்ற எண்ணத்தைக் கைவிட்டு நடிக்கும் பாத்திரத்தைச் சரியாக உணர்ந்து அதற்கு ஏற்றவாறு பேச்சினையும், முகபாவத்தினையும், அங்க அசைவுகளையும் பிறவற்றையும் அமைத்துக் கொள்ள வேண்

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

டும். எனவே சிறந்த நடிகனாக விளங்குபவன் நான் என்ற அகங்காரத்தை அகற்றியவனாக இருப்பான்.

அறுபத்தேழு ஆண்டுகள் நடித்து அநுபவம் பெற்ற போதும் தான் செய்வது சரியென்று அகங்காரம் கொள்ளமாட்டார். எந்த நாடகப் பாத்திரத்தை ஆட முன் வந்த போதும், பிறர் அபிப்பிராயத்திற்குச் செவி சாய்த்தே நடிப்பார். ஒத்திகை வேளையில் பிறநடிகரின் கருத்துக்களையும் கேட்டுத் தான் செய்வது, தான் தரிக்கும் பாத்திரத்திற்கு ஏற்றதாவெனத் தெரிந்து கொள்ளார். கற்றார், கல்லாதார், இளையோர், முதியோர் யாவரிடமும் அபிப்பிராயம் கேட்பார். மேடைக்கு போகுமுன் தன் உடையலங்காரத்தைக் காட்டித் தான் தரிக்கும் வேஷம், முகபாவம், நிலை, நடை, பேச்சு முதலியவற்றைச் செய்து காட்டி மற்றவர்களது எண்ணங்களையும் கேட்டுச் சீர்ப்படுத்திக் கொள்வார்.

கலைஞனிடம் சுயநலம் தாண்டவமாடக் கூடாது என்பதற்கு இன்னோர் எடுத்துக்காட்டைக் காணலாம். சிறிய பாத்திரமாக இருந்தாலும் அப்பாத்திரத்திற்கு உரிய குணங்கள் வெளிப்படக் கூடிய முறையில் நடிக்க முடியுமானால், அதனை அன்புடன் கலையரசு ஏற்றுக் கொள்வார்.

### நாடகத் தயாரிப்பு

நாடகத் தயாரிப்பு பற்றிய இவரது அனுபவங்கள் பலவகைப்பட்டன. நாடகத்தைப் பற்றிய எவ்வித அறிவும் இல்லாதவர்களே இன்று பெரும்பாண்மையான நாடகங்களை தாயாரிக்கின்றார்கள். இதனைக் கலையரசு வன்மையாகக் கண்டிக்கின்றார். கலையரசின் கூற்றில் சொல்வதாக இருந்தால் டைரக்டர் கதையமைப்பு, பேச்சு, பாட்டு, நடிப்பு, வேஷத் தயாரிப்பு, மேடையலங்காரம், ஒளி அமைப்பு முதலியவற்றில் நுண்ணறிவு உடையவராய் இருத்தல் வேண்டும். சுயநலம், பொறாமை, பாரபட்சம் என்பன மருந்துக்கும் இருக்கக் கூடாது. மனித சுபாவங்களைத் தெளிவாய் அறிந்து கொள்ளக் கூடியவராய் இருத்தல் வேண்டும். களைப்பும், சலிப்பும் இல்லாது மன உறுதியுடன் நாடக வெற்றிக்கு உழைக்க வேண்டும்.

நடிகரைத் தெரிவு செய்யும் போது பாத்திரத்திற்கேற்ற முகபாவம், அங்கவமைப்பும் பொருத்தமாக உள்ளவர்களையே தெரிவு செய்ய வேண்டுமென்கிறார். சபையில் பிரபல அங்கத்தவர் என்ற காரணத்தால் அவர்களைப் பொருத்தமில்லாத பாத்திரங்களுக்குத் தெரிவு செய்வதை அவர் கண்டிப்பார்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் உரிய பகுதியை மனப்பாடம் செய்யாதவர்களையும் ஒழுங்காகவும் நேரத்திற்கும் ஒத்திகைக்கு வராதவர்களையும் முழு ஒத்திகைக்கும் பிரசன்னமாயிராது. தமது பகுதி முடிந்ததும் வீட்டுக்குப் போகின்றவரையும் இவர் தமது நாடகங்களிலிருந்து நீக்கி விடுவார். ஒழுங்கும், ஒழுக்கமும் இவர் எல்லா நடிகரிடமும் எதிர்பார்ப்பவை.

நாடகப் பேராசான் சொர்ணலிங்கம் அவர்கள் நாடகக் கலையின் அரசன், ஆசான், நாடகத்தின் சின்னம், தமிழ்ப் பண்பாட்டிற்குக் கண்ணாடி, பொதுமக்களின் பல்கலைக்கழகம். உணர்வைத் தட்டியெழுப்பி அன்பையும், அறிவையும், தாய்மையும் வளர்த்து மங்காப் புகழ் படைத்த கலைஞன் தம்மை நாடகப் பைத்தியக்காரனென்றும், நாடகமே எப்பொழுதும் தனது இலட்சியம் என்றும் பெருமைப்படுவர் கலையரசு சொர்ணலிங்கம். ★

---

## உதயன்

## நேரடி நடவடிக்கை வேண்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பது குறித்து பிரிட்டனின் உதவி வழங்கும் நிறுவனங்கள் ஐந்து சேர்ந்து ஸ்ரீலங்கா அரசிடம் கவலை தெரிவித்துள்ளன. உள்நாட்டு யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படியும் அந்த நிறுவனங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தி உள்ளன.

இந்த நிறுவனங்கள் சேர்ந்து ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பிய கடிதத்தில் —

வடபகுதி மீது அரசு விதித்திருக்கும் பொருளாதாரத் தடை குறித்தும், விமானத் தாக்குதல்களால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்தும், இராணுவம் குடாநாட்டை முற்றுகையிட முனைவதால் மக்களுக்கு ஆபத்து அதிகரித்துள்ளமை குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் நடப்பது உள்நாட்டுப் போர். அதனால் தான் நினைத்த அநியாயங்களையும், திட்டமிடும் அநீதிகளையும் என்ன வகையிலும், என்ன மாதிரியும் செய்யலாம் என்று அரசாங்கம் எண்ணக் கூடாது. — இதனையே ஐந்து பிரிட்டிஷ் நிறுவனங்களும் ஒன்றாக, மறைமுகமாக எடுத்துக் கூறியுள்ளன எனக் கொள்ளலாம்.

இதன் மூலம் ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடும் அடாவடித்தனங்களையும், அக்கிரமங்களையும் சர்வதேசங்கள் மதிப்பிட்டுக் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அரசு உணர்ந்தாக வேண்டிய நிலை உருவாகி வருகிறது என்றும் கூறலாம்.

ஆனால் ஒன்று.

தமிழ் மக்களின் பாதுகாப்பையோ அல்லது வாழ்க்கை நிலையையோ கருத்தில் கொள்ளாமல், ஸ்ரீலங்கா அரசு செயற்படுவது தெரிந்த பின்னரும் வெளி உலகம் வெறும் கண்டனங்களையும், கவலையையும் தெரிவித்துக் கொண்டிருப்பதுதான்; தமிழர்களுக்கு மனவருத்தத்தைத் தருவதாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர் மீதான கொடுமைகளை கடந்த இரண்டொரு மாதங்களாகப் புரியவில்லை. 1970 ஆம் ஆண்டிலிருந்தே கொடுமைகள் தீவிரமடைந்து விட்டன; 1983ஆம் ஆண்டோடு நிலைமை படுமோசமடைந்தது. கடந்த இரண்டு வருடங்களாக படுபயங்கர கட்டத்துக்கு வந்திருக்கிறது.

தமிழர்கள் அநியாயமாக அழித்தொடுக்கப்படுகிறார்கள். தங்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளைக் கேட்பதற்காக அவர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது.

இந்த நிலையிலும் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவும் உலக நாடுகள், அவற்றின் அரசுகள், தொண்டர் நிறுவனங்கள் கவலை தெரிவிப்பதோடு மட்டும் நிற்பது அர்த்தமற்ற ஒன்று என்றே தமிழர்கள் கருதுகிறார்கள். அழிவின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் தங்களை நாகரிகமும் பண்பாடும் நிறைந்த சர்வதேசம் கைவிட்டு விட்டதாகவே அவர்கள் கவலைப்படுகிறார்கள்; உணருகிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசு தவறிழைக்கிறது. கொடுமை செய்கிறது என்பது தெரிந்த பின்னரும் அதனை நேர் வழிக்குக் கொண்டு வருவதற்கு நேரடி நடவடிக்கையில் — செயலில் — இறங்காமல் சொல்லால் மட்டும் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கும் நிதி உதவிகளை நிறுத்துவதை மட்டும் இங்கு நேரடி நடவடிக்கை என்று கூறவில்லை. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிப்பதே உண்மையான நேரடி நடவடிக்கையாகும்.

அதனைச் செய்தால் மட்டுமே மனித நேயத்தின் பேரில் தமிழர்களுக்கு உதவியதாகவும், நீதிக்காக உழைத்ததாகவும் முடியும். சர்வதேசம் இதை உணர்வது எப்போது?

---

## உற்சவங்கள்

மயிலணி, ஜூலை 26

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய நவநாள் உற்சவத் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு புனித சந்தான மாதா ஆலய வருடாந்த உற்சவ இறுதி நாள் நிகழ்வும், விசேட பூசையும், திருச்சொருப பவனியும் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். [உ-30]

## நாளை

யாழ்ப்பாணம் ஜூலை 26

நல்லூர் திருவிழாக் காலங்களில் தொண்டு புரியும் மக்கள் நலன்புரி கழகத் தொண்டர்களின் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

---

### தமிழரின்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான பழமை வாய்ந்ததும், பெறுமானம் உள்ளதுமான மரத்தில், உலோகத்தில், கல்லினாலான சிற்பங்கள், விளக்குகள், விருதுகள், தாம்பாளங்கள், அரும்காட்சிப் பொருள்கள், ஏட்டுச் சுவடிகள், சான்றிதழ்கள், தேடக்கிடைத்தற்கரிய பிரசுரங்கள், புத்தகங்கள், பழமையான வாத்தியக் கருவிகள், ஓவியங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களைப் பிரதிபலிக்கும் வேறு பொருட்கள் முதலியவற்றை தமிழீழ மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

மக்களிடமிருந்து பெறப்படும் பொருட்கள் யாவும் சிதைவுறாது காப்பாற்றி மீள ஒப்படைக்கப்படுவதில் மிகச் சிரத்தை எடுக்கப்படும். எனவே இந்தப் பொருள்களைக் கண்காட்சியில் வைப்பதற்காகவும், பலர் கண்டு களிக்க வாய்ப்பளிப்பதற்காகவும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் மனமுவந்து ஒப்படைக்கும்படி தமிழீழ மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

காலத்தின் தேவையான இந்தக் கண்காட்சியின் வெற்றிக்கு அனைத்து மக்களுடைய பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்; பொருள்களை கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் கையளித்து அதற்கான உறுதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஏழாலை, தெற்கு வசந்த நாகபூசணி ஆலய பராமரிப்பில் உள்ள வசதி குறைந்த வயோதிபர் மற்றும் சிறார்களுக்கான இலவச வைத்திய சேவை நிலையம் இன்று பிற்பகல் 1 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

யாழ் மருத்துவபீட பேராசிரியர் திரு. எஸ். நச்சினார்க்கினியன் சேவையை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

டாக்டர் ஸ்ரீகாந்த, டாக்டர் சி. சிவானந்தராசா ஆகியோர் இலவச மருத்துவ சேவையை வழங்குவர். [உ-15]

★ ★ ★

இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தினரின் கலந்துரையாடல் நிகழ்ச்சி, அத்தியடியில் உள்ள கழக அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

★ ★ ★

கந்தர்மடம், ஸ்ரீ சிவகுரு நாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கத்திற்குப் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

மேற்படி குருபீடத்தில், ''தவமுனிவனின் தமிழ் மந்திரம்'' என்ற பொருளில் தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக இப்பாராட்டு விழா நடத்தப்படுகிறது. [அ]

★ ★ ★

குருநகர், ஜூலை 26

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைகள் பயிலகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்றும் நாளையும் மன்றக் கலையரங்கில் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கு யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும், நாளைய நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பியும் தலைமை வகிப்பர் [உ-51]

## பஜனை

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழீழ மக்களின் துயர் நீங்கிட வேண்டி ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் கோவிலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் தினமும் மாலை 4 மணி முதல் 5.30 மணிவரை ஸ்ரீ ராம நாம கோடீ நாம பஜனை நடைபெறுகிறது. (ஐ)

---

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 26

குருநகர் புனித யாகப்பர் திருவிழாவை முன்னிட்டு இன்று மாலை குருநகர் விளையாட்டு மைதானத்தில் கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

பிற்பகல் 3.15 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சாம்பியனான அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக ''பி'' அணி மோதும்.

மாலை 4.15 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசஅதிபர் பிரிவு சாம்பியனான இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக ''ஏ'' அணி மோதும். [உ]

★ ★ ★

''கே. வி. ஸ்.'' இன்னத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று காலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இந்த ஆட்டத்தில் யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும்.

பிரதம விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். [உ]

---

## மாரடைப்பால் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

கடந்த 21 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சபாபதி அல்லது தயாநிதி (சின்னையா சின்னத்தம்பி—இரான்) என்ற போராளி மட்டக்களப்பில் மாரடைப்பால் வீரமரணமடைந்தார் என அறிவிக்கப்பட்டது. [உ-5]

## மூன்று கப்பல்களில் உணவுப் பொருள்

கொழும்பு, ஜூலை 26

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்காக தற்போது கொழும்புத்துறை முகத்தில் இரு கப்பல்களில் உணவுப்பொருள்கள் ஏற்றப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செதி ஒன்று தெரிவிக்கிறது.

மேலதிக பொருள்கள் மற்றொரு கப்பலில் ஏற்றிச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் திரு கிறிஸ்டி சில்வா இவ்வாறு தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒலிம்பிக்ஸ் செய்திகள்

# பார்சிலோனாவில் குண்டு வெடித்தது!

ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெற்று வரும் பார்சிலோனா நகரில் வன்முறைச் சம்பவங்கள் நிகழக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

போட்டி தொடங்குவதற்கு முதல் நாளான — நேற்று முன்தினம் — அப்பகுதியில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ஆனால் நகருக்கு அண்மையில் இருந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திலேயே வெடிச் சம்பவம் இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்: இதுகுறித்து அவர்கள் மேலதிக தகவல்களையோ விளக்கங்களையோ வெளியிடவில்லை. (உ-10)

# ஒலிம்பிக்ஸை ஒட்டி யுத்த நிறுத்த அறிவிப்பு

ஒலிம்பிக்ஸ் நடைபெறும் ஸ்பெயின் நாட்டில், ஒலிம்பிக் போட்டிகளை ஒட்டி தாங்கள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக அங்குள்ள கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

''எற்றா'' எனப்படும் பாஸ்க் இன மக்கள் அங்கு தனிநாடு கோரி பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அவர்களே தற்போது யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றனர்.

ஸ்பெயினில் மன்னராட்சி முடிவடைந்து, ஜனநாயக ஆட்சி ஏற்பட்ட பின் 'பாஸ்க்' மக்களுக்கு சுயாட்சி மாநிலம் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆனால் தமக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி 'எற்றா' இயக்கத்தினர் போராடி வருகிறார்கள். இந்த வருடத்தில் அவர்கள் பல குண்டு வெடிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# ஸ்பெயின் நாடு பின்தள்ளப்படுகிறது!

லண்டன், ஜூலை 26

ஒலிம்பிக்ஸ் நடைபெறும் ஸ்பெயின் நாட்டில் அந்த நாட்டுக்கு எதிரான உணர்வு அதிகம் தலைதூக்கியிருப்பதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போட்டிகள் நடைபெறும் கற்றலோனியா குடியரசில் உள்ள மக்கள் மத்தியிலேயே இந்த எதிர்ப்புணர்வு காணப்படுறது.

ஸ்பெயினில் உள்ள கற்றலோனியா குடியரசின் தலைநகரான பார்ஸலோனாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது தெரிந்ததே.

இந்தக் குடியரசு ஒரு சுயாட்சி மாநிலமாகும்.

அங்கு பேசப்படும் கற்றலான் மொழியே மாநிலத்தின் உத்தியோகபூர்வ மொழியாகும். அங்குள்ள மக்கள் ஸ்பானிய மொழி தமது மாநிலத்தில் பேசப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

ஒலிம்பிக்ஸ் மைதானத்தை சுற்றிலும், நகரமெங்கும் கற்றலோனிய மாநிலக்கொடிகளே பறக்கவிடப்பட்டுள்ளன.

ஸ்பெயினின் தேசியக்கொடி மைதானத்தில் ஏனைய 171 நாடுகளின் கொடிகளோடு 172 ஆவது கொடியாக — ஒரே ஒரு கொடி மட்டுமே — பறக்க விடப்பட்டுள்ளது.

சுயாட்சி மாநிலத்தில் ஸ்பெயினின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கற்றலோனிய மக்கள் வெகு தீவிரமாக உள்ளனர்.

ஒலிம்பிக்ஸ் பந்தயங்கள் ஸ்பெயினில் அல்ல; கற்றலோனியாவிலேயே நடைபெறுவதாக எழுதுங்கள் என அங்குள்ளவர்கள் வெளிநாட்டுச் செய்தியாளர்களை வற்புறுத்தி வருகின்றனராம்.

ஒலிம்பிக்ஸ் நகரில் கற்றலோனியா மக்களின் கையே ஓங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## கிழக்கு படையினரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்கிறது என்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

கடந்த வாரம் 19 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை நடத்த அரசு எடுத்துள்ள முடிவு குறித்து உள்ளூர் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

விசாரணைக் குழுவில் சுதந்திரமான முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம் பியுமான அஷ்ரப் தெரிவித்துள்ளார் 19 முஸ்லிம்கள் கொலையுண்டதுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று முன்கூட்டியே ஊகம் செய்யக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

— இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## ''பலவேகய'' நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை

கொழும்பு ஜூலை 26

வடக்கில் இராணுவம் மேற்கொண்ட ''பலவேகய'' இராணுவ நடவடிக்கை எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை - இவ்வாறு தென்னிலங்கை வட்டாரங்களில் கருதப்படுவதாக பிரபல சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார். [உ-10]

## விமான விபத்தில் 71 பேர் பலி

இந்தோனேஷிய எயர் லைன்ஸுக்குச் சொந்தமான விமானம் ஒன்று நேற்று அங்குள்ள மலை ஒன்றில் மோதி நொருங்கியதில் அதிலிருந்த 71 பேரும் உயிரிழந்தார்கள்.

## பார்சிலோனா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அணிவகுப்பு, நடனங்கள், வாத்திய நிகழ்ச்சிகள் போன்றவற்றை சிறப்புற — உலகம் வியக்கும் வண்ணம் — நடத்திக் காட்டினர்.

இந்நிகழ்வுகளை மைதானத்தின் மூலை முடுக்குகள் எங்கும் வைக்கப்பட்டிருந்த டெலிவிஷன் கமராக்கள் படம் பிடித்து உலகம் முழுவதும் ஒளிபரப்பின: சுமார் 350 கோடி மக்கள் அவற்றை டெலிவிஷனில் கண்டு களித்ததாக மதிப்பிடப்பட்டது.

முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்ற மைதானத்தில் சுமார் 65 ஆயிரம் பேர் நேரடியாகக் கூடி நின்று அவற்றை அவதானித்தனர்.

கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து பங்குபற்றும் நாட்டு அணிகளின் வீரர்கள் மைதானத்தில் அணி வகுத்துச்சென்றனர்.

அவர்களை மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர்:

## இன்னுயிர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினரும் குண்டர்களும் சேர்ந்து 1983 ஜூலை 25, 27 ஆம் திகதிகளில் கோரமாகக் கொன்று குவித்து. எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

தமிழர்களின் நெஞ்சங்களையும், உலகத்தின் மனச்சாட்சியையும் உசுப்பிவிட்டதே இந்தப் படுகொலை நிகழ்வுதான்.

வெலிக்கடை சிறையில் தங்கள் இன்னுயிரை ஈந்த தமிழீழ விடுதலைப் போராட்ட முன்னோடிகளான குட்டிமணி, தங்கத்துரை மற்றும் எமது இயக்கத்தின் தூண்களான தாமு கந்தையா, சிவானந்தராசா, சத்தீஸ்வரன் உட்பட அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கம் செய்வோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## அரசுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

எடுத்துச்செல்லப்படும் சுலோக அட்டைகள், வீதிகளை அலங்கரிக்கும் தோரணங்கள் ஆகிய சகலதும் கறுப்பு நிறத்தில் இருக்கும் என்றும் —

இந்த ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் பங்கு பற்ற வரும் பொதுமக்கள் கறுப்பு உடை அல்லது கறுப்புப்பட்டி அணிந்து வருவர் எனவும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கறுப்பு எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடியாக இம்மாதம் 31 ஆம் திகதி மாத்தறையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாப கூட்டத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் உரையாற்றுவார்கள். [அ-10]

## ஈராக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனும் இராணுவத் தளபதிகளுடனும் அவர் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார் என்றும் — நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு தாங்கள் ஆதரவு தருவதாக பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

ஐ. நா. மேற்பார்வையில் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்த நிபந்தனைகளை கடைப்பிடிப்பதற்கு ஈராக் மறுத்திருப்பதை அடுத்தே அந்த நாட்டின் மீது மீண்டும் தாக்குதல் நடத்த அமெரிக்கா முஸ்தீபு செய்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

மணிலா சென்றிருக்கும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர், ஐ. நா சபையின் அனுமதி இன்றியே [illegible] தாக்குதல் நடத்தக் கூடும் என்று [illegible] வைத்து அறிவித்தார்.

# இடம்பெயரும் நிலையை மாற்ற அணி திரள்வோம்!

## மாவீரர் மண்டபத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 26

எமது மண் போர்க்களமாக இருக்கும் வேளையில் மக்கள் இடம்பெயர்வது தவிர்க்க முடியாதது. ஆனால் இந் நிலையை மாற்றி, இடம்பெயர்வதை நிறுத்த வழியுண்டு.

அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்று திரண்டு எதிரியை வீழ்த்தினால் எமது மண் விடுதலை பெறும். அப்போது எமது எல்லைகள் காப்பாற்றப்படும்; அதன் பின்னர் மக்கள் இடம்பெயரும் நிலை மாறிவிடும்.

இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு இளம்பரிதி.

நாவாந்துறை, சித்தம்பலம் [நீகன்] நகரில் கப்டன் ஜிம்கலி சனசமூக நிலையத்தின் மாவீரர் நினைவுத் திறப்புவிழாவில் தேசியக் கொடியான புலிக்கொடியை ஏற்றி வைத்துப் பேசிய போதே திரு: இளம்பரிதி இவ்வாறு சொன்னார். விழாவுக்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. எஸ். அலெக்ஸ் தலைமை வகித்தார்.

திரு: இளம்பரிதி தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

தென் தமிழீழ மக்கள் இராணுவ, பொருளாதார நெருக்கடி மூலம் ஸ்ரீலங்கா அரசின் கொடூரப் பிடியில் நசுக்கப்படும் போதும் விடுதலைப் போராட்டத்தில் நெருக்கமாக இணைந்து கொண்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்ட பரப்புகளிலும் படுகொலைகளின் மத்தியிலும் போராட்ட வேகம் வளர அப்பகுதி மக்கள் உதவுகின்றார்கள். அது போன்று நெருக்கடி வேளையானாலும் அனைத்து தமிழ் மக்களும் போராட்டத்தில் இணைய வேண்டும். — என்றார்:

கடற் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. மறவன், யாழ். மாநகர ஆணையாளர் திரு: வே. போ: பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

முன்னதாக அம்பாறை மாவட்டத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருணகிரி மங்கள விளக்கேற்ற மாவீரர் மண்டபத்தை யாழ். மாவட்டத் தளபதி திரு: செல்வராஜா திறந்து வைத்தார். மாவீரர் தீபத்தைக் கடற் புலிகள் தளபதி கங்கை அமரன் ஏற்றினார். (அ-111)

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை தங்கராசா

[ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி, வலி. மேற்கு பிரதேச சபை - சங்கானை பட்டின உப அலுவலகம்]

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை ''ரத்தின வாசா'' வைச்சேர்ந்த திரு. தா. தங்கராசா அவர்கள் 22-07-92 அன்று காலமானார்.

அன்னார் தவம் அவர்களின் அன்புக் கணவரும், ஆதித்தன் [பேராதனை பல்கலைக்கழகம், கண்டி], ஆதவன் [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி நாராயணசாமி, காலஞ்சென்ற கெங்கராசா, காலஞ்சென்ற முருகேசு, கனகலிங்கம் [கொழும்பு], டாக்டர் நாகரட்ணம் [கொழும்பு], திருமதி தவமணி வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதன் [கொழும்பு], ஜெயரஞ்சிதன் [கணக்காளர் - ஷப்றா நிறுவனம், யாழ்ப்பாணம்], திருமதி வதனா பதிமநாதன் [மட்டக்களப்பு] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-07-1992 காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
நா. ஜெயரஞ்சிதன்
மைத்துனர்

''ரத்தின வாசா''
பங்குரு வீதி,
வட்டு கிழக்கு. [5200]

### பரமநாதர் பொன்னம்மா

உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பரமநாதர் - பொன்னம்மா 92-07-25 அன்று காலை 7.00 மணியளவில் காலமானார்.

இவர் காலம் சென்ற சி. பரமநாதரின் [கச்சேரி சின்னத்துரை) அன்பு மனைவியாரும், ப. சோமசுந்தரம் (கனடா), து. மகேஸ்வரி (உரும்பராய் தனியார் கல்வி நிறுவன இயக்குனரும், ஆசிரியரும்), காலம் சென்ற ப. விக்கினேஸ்வரன், மற்றும் நா. விக்கினேஸ்வரி (இந்தியா), சிறு றஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோ. பாக்கியலக்ஷ்மி (கனடா], கலைஞர் வி. நாகலிங்கம் (இந்தியா), க. சிவானந்தன் (அரச நில அளவையாளர், வவுனியா], ஆகியோரின் மாமியாரும், சோ. நக்கீரன் [கனடா], சோ: இலங்கிரன் (கனடா], ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (25-07-92] மாலை 4.00 மணிக்கு உரும்பராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. மகேஸ்வரி.
(மகள்)

உரும்பராய். [21967]

### இளையதம்பி ஞானப்பிரகாசம்

பாஷையூர் இளையதம்பி ஞானப்பிரகாசம் 25-07-92 காலமாகிவிட்டார். அன்னார் பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகஸ்தர் ஜீ. ஜீ தேவதாசவின் அன்புத் தந்தையும், தவபுஸ்பம் தேவதாசனின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26-07-92] பிற்பகல் 3 00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தவபுஸ்பம் தேவதாஸ்.

35/4. 2ம் குறுக்கு வீதி,
பாஷையூர். [21911]

உ

ஓம் சாயி ராம்

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை

சித்தன்கேணி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி தலைவர் ஸ்ரீ. தா. தங்கராசா அவர்கள் 22-07-92 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்பரின் ஆத்மா பகவானுடன் இரண்டறக் கலந்து சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஜெய் சாயி ராம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி
சித்தன்கேணி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா மண்டலி
சங்கானை

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா மண்டலி
தொல்புரம்

(சி/2779)

உபயதாரினை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org